எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்,110, அண்ணா சாலை, சென்னை-2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின்

செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: முனைவர்.சி.பாலசுப்பிரமணியன், இணை இயக்குநர்(பொ.)

ஆணையரக செ.மு.ஆ.எண்.இ1/22904/2023 நாள்:15.05.2024.

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் சென்னை-02 – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 27.07.2022-ல் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 09 நபர்களை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு இளநிலை உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டது – 09 இளநிலை உதவியாளர்களின் தற்காலிகப் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 அவர்களின் கடித எண். 1980/PSD-C2 /2023, நாள் 18.08.2023
2. ஆணையரக செயல்முறை ஆணை எண். இ1/22904/2023, நாள்: 22.09.2023.

--------

பார்வை 1-ல் காணும் 18.08.2023 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தின்படி 27.07.2022-ல் நடத்தப்பட்ட தொகுதி-IV எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 11 நபர்களை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு இளநிலை உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டனர்.

2) இதனைத் தொடர்ந்து, பார்வை-2ல் காணும் செயல்முறை ஆணையின்படி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 11 நபர்களுக்கு தற்காலிகமாக இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டு, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 11 நபர்கள் அவரவர் பெயருக்கெதிரே கலம்-3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலகில் பணியமர்த்தப்பட்டனர் இவர்கள் கலம் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் பணியில் சேர்ந்து இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திரு./ திருமதி/செல்வி) | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சி.விவேகா | அரசு மைய அச்சகம், சென்னை-1 | 29.09.2023 மு.ப. |
| 2. | எஸ்.ஜெனிஃபர் குனோரி | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 27.09.2023 மு.ப. |
| 3. | எல்.பிரியங்கா | அரசு மைய அச்சகம், சென்னை-1 | 03.10.2023 மு.ப. |
| 4. | எஸ்.நதியா | அரசு மைய அச்சகம், சென்னை-1 | 27.09.2023 மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ஆணையரகம், சென்னை–2 | 18.10.2023 மு.ப. |
| 6. | ப்பி.கலைவாணி | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023 மு.ப. |
| 7. | ச.முனீஸ்வரன் | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023மு.ப. |
| 8. | எஸ்.சத்யா | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 29.09.2023 மு.ப. |
| 9. | பா.மனோகரி | ஆணையரகம், சென்னை–2 | 27.09.2023 மு.ப. |
| 10. | ப்பி.கௌரிஸ்ரீ | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023 மு.ப. |
| 11. | ச.பரந்தாமன் | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1 | 26.09.2023 மு.ப. |

3) மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்.05 மற்றும் 09ல் காணும் திருமதி.நா.ஜெயந்தி மற்றும் திருமதி. பா.மனோகரி ஆகிய இரு இளநிலை உதவியாளர்கள் தமிழ்வழி மூலம் கல்வி பயின்றதற்கான (PSTM) (Person Studied in Tamil Medium) சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உறுதி செய்த பின்னர் இவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படும்.

4) பார்வை 1–ல் காணும் 18.08.2023 நாளிட்ட, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், பத்தி எண்.5–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 09 தற்காலிக இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறை மேதகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள குரூப்–IV பணியாளர் தேர்வு குறித்த வழக்குகளின் (writ petitions) தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு, மேற்காணும் 09 இளநிலை உதவியாளர்களின் தற்காலிக பணி அட்டவணையில் அவரவர் பெயருக்கெதிரே கலம் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திரு./ திருமதி/செல்வி) | பணியமர்த்தப்பட்ட அலகு | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சி.விவேகா | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023 மு.ப. |
| 2. | எஸ்.ஜெனிஃபர் குளோரி | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1 | 27.09.2023 மு.ப. |
| 3. | எல்.பிரியங்கா | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 03.10.2023 மு.ப. |
| 4. | எஸ்.நதியா | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 27.09.2023 மு.ப. |
| 5. | ப்பி.கலைவாணி | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023 மு.ப. |
| 6. | ச.முனீஸ்வரன் | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023மு.ப. |
| 7. | எஸ்.சத்யா | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 29.09.2023 மு.ப. |
| 8. | ப்பி.கௌரிஸ்ரீ | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 29.09.2023 மு.ப. |
| 9. | ச.பரந்தாமன் | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1 | 26.09.2023 மு.ப. |

5) மேலும், பணிவரன்முறைபடுத்தப்பட்ட நாள் முதல், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தினை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண்பருவ காலத்தில் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

சி.பாலசுப்பிரமணியன்,
இணை இயக்குநர்(பொ.)

பெறுநர்

1. திருமதி.சி.விவேகா, அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
2. செல்வி.எஸ்.ஜெனிஃபர் குளோரி, அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
3. செல்வி.எல்.பிரியங்கா, அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
4. திருமதி.எஸ்.நதியா, அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
5. திருமதி.நா.ஜெயந்தி, ஆணையரகம், சென்னை-2.
6. திருமதி.ப்பி.கலைவாணி, அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
7. திரு.ச.முனீஸ்வரன், அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
8. திருமதி எஸ்.சத்யா, அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்-அலகுத்தலைவர் மூலமாக.
9. திருமதி.பா.மனோகரி, ஆணையரகம், சென்னை-2.
10. செல்வி.ப்பி.கௌரிஸ்ரீ, அரசு மைய அச்சகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக.
11. திரு.ச.பரந்தாமன், அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1-அலகுத்தலைவர் மூலமாக

நகல் பெறுநர்

1) பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-1
2) துணை இயக்குநர், அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1
3) துணைப் பணிமேலாளர், அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.
4) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை-1.
5) மாவட்டக் கருவூல அலுவலர், மாவட்டக் கருவூல அலுவலகம், விருத்தாசலம்.
6) கண்காணிப்பாளர் 'இ' பிரிவு/ "இ4" உதவியாளர் மற்றும் இ2 இளநிலை உதவியாளர், ஆணையரகம், சென்னை-2.
7) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 (தகவலுக்காக அனுப்பப்படுகிறது).
8) உதிரி - 3 நகல்கள்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ஆணையரின் நேர்முக உதவியாளர்.

17/5/2024